1974 சனவரி 21]

இருக்கிறது. ஆகவே, நல்ல தண்ணீர் கிடைக்கிற இடத்தில் சமுதாயக் கிணறுகளைத் தோண்டி ஆதித் திராவிட மக்கள் பயன் பெற வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நல்ல தண்ணீர் கிடைக்கும் இடத்தில் சமுதாயக் கிணறு தோண்டிய பிறகு பக்கத்திலே இருக்கக்கூடிய தனியாரும் கிணறு தோண்டுகிற காரணத்தால் அந்தத் தண்ணீர் குறைந்து விடுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்க முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால் நல்ல தண்ணீர் கிடைக்குமானால் அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

அம்மூருக்கு பேருந்து நிலையம்

*** 57 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு ஜில்லா வாலாஜா ஒன்றியத்தில் உள்ள அம்மூர் பேரூராட்சியில் ஒரு பஸ் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) அரசினிடம் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : என்னுடைய தொகுதியில் அம்மூர் பேரூராட்சி பெரிய ஊராக இருக்கிறது. அங்கு பஸ் நிலையம் இல்லை. அது சம்பந்தமாக முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு கடனுதவி கொடுத்து ஒரு நிலையத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்றால் மண்டலப் போக்குவரத்து அதிகாரிகள் அனுமதி பெற வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் இடம் சுகாதாரத்திற்கேற்ற இடமா, போக்குவரத்துக்குச் சாதகமான இடமா, அவசியம் பேருந்து நிலையம் தேவையா என்பதுபற்றி யெல்லாம் ஆராய்ந்து மண்டலப் போக்குவரத்து அதிகாரி இசைவு

தெரிவிக்க வேண்டும். அம்மூர் பேரூராட்சிப் பகுதியில் பேருந்து நிலேயம் அமைக்க வேண்டுமென்று கோரி மண்டலப் போக்குவரத்து அதிகாரிக்கோ, கடன்வசதி கோரி அரசினருக்கோ இதுவரை எந்த மனுக்களும் அனுப்பப்படவில்லே.

தொழிலாளர் நல நிதித் திட்டம்

* 58 வின—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 'தொழிலாளர் நல நிதித் திட்டம்' அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதன் முக்கிய குறிக்கோள்கள் என்னென்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இதைப்பற்றி உண்டாக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம் தொழிலாளர் நலநிதி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்கின்றது. இச்சட்டத்தின் கீழ் அமையவிருக்கும் தமிழ் நாடு தொழிலாளர் நல வாரியம் அந்நிதியின் பொறுப்பு வகிக்கும் அமைப்பாக இருக்கும். இச்சட்டத்தின் 17-வது பிரிவின்படி இவ்வாரியம் நிதியில் நிலேபெற்றுள்ள பணத்தைப்பயன்படுத்தலாம்.

திரு. கா. வேழவேந்தன் : தமிழக அரசு அமைத்துள்ள இந்தச் சீரிய திட்டத்தை மேன்மேலும் விரிவுபடுத்தி பணம் இருந்தும் மனம் இல்லாமல் இருக்கும் தொழில் அதிபர்களேத் தூண்டி தொழிலாளர்களுக்கான வசதிகளேப் பெருக்க உரிய திட்டம் வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதற்காகவே குழு ஒன்று விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அது அமைக்கப்பட்டவுடன் அதற்கான வேலேகள் தொடர்ந்து செய்யப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இதற்கான சந்தாத் தொகைகள் 1973 நவம்பரில் பிடித்தம் செய்திருக்கிறூர்கள். அந்தத் தொகை முழுவதும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறதா ? மானேஜ்மென்டார் பங்கும் சேர்ந்து வந்திருக்கிறதா ? இதன் பணிகள் எப்போது தொடங்கப்படும் ?